# OFFICE OF THE CHIEF ELECTORAL OFFICER

## PUDUCHERRY

Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone : (0413) 2292204,2292205/ Fax (0413)2292206
Web:http//ceopuducherry.py.gov.in ; Email: jtceo_pondicherry@eci.gov.in


**"Greater Participation for a Stronger Democracy"**

புதுச்சேரி. தேதி 24.11.2025

## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் நடைபெற்று வரும் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் (Special Intensive Revision) திட்டமிட்டபடி நடைபெற்று வருகின்றன. அனைத்து தகுதியுள்ள வாக்காளர்களும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவதை உறுதி செய்ய தேர்தல் இயந்திரம் முழுவதும் இடையறாது செயல்பட்டு வருகிறது.

2. தற்போது வரை, மொத்தம் 10.21 இலட்சம் வாக்காளர்களில், 9,76,747 கணக்கெடுப்புப் படிவங்கள் (Enumeration Forms) விநியோகிக்கப்பட்டுள்ளன; 5,89,075 படிவங்கள் டிஜிட்டல் வடிவத்தில் பதியப்பட்டுள்ளன.

3. சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்ய 962 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLOs), 30 உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் (AEROs), 17 வாக்காளர் பதிவு அதிகாரிகள் (EROs), 2 மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் (DEOs) பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் இணைந்து பணியாற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் 2300-க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLAs) நியமிக்கப்பட்டுள்ளனர்.

4. அனைத்து வாக்காளர்களின் வசதிக்காக நவம்பர் 22 மற்றும் 23 ஆம் தேதிகளில், அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

**5. மாவட்ட வாரியாக 24.11.2025, பிற்பகல் 2 மணிவரை உள்ள விவரங்கள்:**

| *மாவட்டம்* | *27.10.2025 நிலவரப்படி மொத்த வாக்காளர்கள்* | *மொத்த விநியோகிக்கப்பட்ட கணக்கெடுப்புப் படிவங்கள்* | | விநியோகம் செய்யப்படாத கணக்கெடுப்புப் படிவங்கள் | | திரும்பப் பெற முடியாத கணக்கெடுப்புப் படிவங்கள் | | மொத்த டிஜிட்டல் வடிவமாக்கப்பட்ட கணக்கெடுப்புப் படிவங்கள | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| புதுச்சேரி (ஏனம் மற்றும் மாஹே உள்பட) | 8,51,775 | 8,08,310 | 94.90% | 43,465 | 5.10% | 11,841 | 1.39% | 4,86,844 | 57.16 % |
| காரைக்கால் | 1,69,803 | 1,68,437 | 99.20% | 1,366 | 0.80% | 3,205 | 1.89% | 1,02,231 | 60.21 % |
| மொத்தம் | 10,21,578 | 9,76,747 | 95.61% | 44,831 | 4.39% | 15,046 | 1.47% | 5,89,075 | 57.66% |

# OFFICE OF THE CHIEF ELECTORAL OFFICER

## PUDUCHERRY

Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone : (0413) 2292204,2292205/ Fax (0413)2292206
Web:http//ceopuducherry.py.gov.in ; Email: jtceo_pondicherry@eci.gov.in


"Greater Participation for a Stronger Democracy"

**6. சட்டமன்றத் தொகுதி (AC) வாரியாக 24.11.2025, பிற்பகல் 2 மணிவரை உள்ள விவரங்கள்:**

| *சட்டமன்ற தொகுதி* | *27.10.2025 நிலவரப்படி மொத்த வாக்காளர்கள்* | *மொத்த விநியோகிக்கப்பட்ட கணக்கெடுப்புப் படிவங்கள்* | | விநியோகம் செய்யப்படாத கணக்கெடுப்புப் படிவங்கள் | | திரும்பப் பெற முடியாத கணக்கெடுப்புப் படிவங்கள் | | மொத்த டிஜிட்டல் வடிவமாக்கப்பட்ட கணக்கெடுப்புப் படிவங்கள | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| மண்ணாடிப்பட்டு | 32968 | 32231 | 97.76% | 737 | 2.29% | 700 | 2.12 % | 23142 | 70.20% |
| திருபுவனை (தனி) | 33873 | 32679 | 96.48% | 1194 | 3.65% | 542 | 1.60 % | 22900 | 67.61% |
| ஊசுடு (தனி) | 34707 | 32598 | 93.92% | 2109 | 6.47% | 268 | 0.77 % | 18639 | 53.70% |
| மங்கலம் | 39820 | 37239 | 93.52% | 2581 | 6.93% | 340 | 0.85 % | 22232 | 55.83% |
| வில்லியனூர் | 46396 | 43492 | 93.74% | 2904 | 6.68% | 907 | 1.95 % | 27366 | 58.98% |
| உழவர்கரை | 44275 | 38876 | 87.81% | 5399 | 13.89 % | 686 | 1.55 % | 20753 | 46.87% |
| கதிர்காமம் | 33474 | 31224 | 93.28% | 2250 | 7.21% | 427 | 1.28 % | 19397 | 57.95% |
| இந்திரா நகர் | 34469 | 32344 | 93.84% | 2125 | 6.57% | 193 | 0.56 % | 19245 | 55.83% |
| தட்டாஞ்சாவடி | 29489 | 28173 | 95.54% | 1316 | 4.67% | 1208 | 4.10 % | 15846 | 53.74% |
| காமராஜ் நகர் | 39350 | 37193 | 94.52% | 2157 | 5.80% | 509 | 1.29 % | 15448 | 39.26% |
| லாஸ்பேட்டை | 32115 | 30701 | 95.60% | 1414 | 4.61% | 759 | 2.36 % | 15419 | 48.01% |
| காலாப்பேட் | 35996 | 34384 | 95.52% | 1612 | 4.69% | 534 | 1.48 % | 16161 | 44.90% |
| முத்தியால்பேட்டை | 28248 | 25439 | 90.06% | 2809 | 11.04 % | 470 | 1.66 % | 14363 | 50.85% |
| ராஜ்பவன் | 24733 | 21399 | 86.52% | 3334 | 15.58 % | 602 | 2.43 % | 10956 | 44.30% |
| உப்பளம் | 27615 | 26608 | 96.35% | 1007 | 3.78% | 592 | 2.14 % | 14595 | 52.85% |
| உருளையன்பேட் | 24370 | 23863 | 97.92% | 507 | 2.12% | 478 | 1.96 % | 13324 | 54.67% |
| நெல்லித்தோப்பு | 28847 | 28762 | 99.71% | 85 | 0.30% | 408 | 1.41 % | 16196 | 56.14% |
| முதலியார்பேட்டை | 36812 | 36089 | 98.04% | 723 | 2.00% | 214 | 0.58 % | 21104 | 57.33% |

# OFFICE OF THE CHIEF ELECTORAL OFFICER

## PUDUCHERRY

Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone : (0413) 2292204,2292205/ Fax (0413)2292206
Web:http//ceopuducherry.py.gov.in ; Email: jtceo_pondicherry@eci.gov.in


"Greater Participation for a Stronger Democracy"

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரியாங்குப்பம் | 40168 | 37819 | 94.15% | 2349 | 6.21% | 167 | 0.42 % | 25509 | 63.51% |
| மணவெளி | 36640 | 34416 | 93.93% | 2224 | 6.46% | 232 | 0.63 % | 23385 | 63.82% |
| ஏம்பலம் (தனி) | 35428 | 34625 | 97.73% | 803 | 2.32% | 379 | 1.07 % | 21078 | 59.50% |
| நெட்டப்பாக்கம் (தனி) | 32890 | 31904 | 97.00% | 986 | 3.09% | 374 | 1.14 % | 20533 | 62.43% |
| பாகூர் | 29644 | 29306 | 98.86% | 338 | 1.15% | 407 | 1.37 % | 20955 | 70.69% |
| நெடுங்காடு (தனி) | 33425 | 33422 | 99.99% | 3 | 0.01% | 648 | 1.94 % | 20562 | 61.52% |
| திருநள்ளார் | 32887 | 32884 | 99.99% | 3 | 0.01% | 330 | 1.00 % | 19741 | 60.03% |
| காரைக்கால் வடக்கு | 37472 | 37071 | 98.93% | 401 | 1.08% | 722 | 1.93 % | 21523 | 57.44% |
| காரைக்கால் தெற்கு | 33462 | 33305 | 99.53% | 157 | 0.47% | 1015 | 3.03 % | 19966 | 59.67% |
| நிரவி - டி.ஆர்.பட்டிணம் | 32557 | 31755 | 97.54% | 802 | 2.53% | 490 | 1.51 % | 20439 | 62.78% |
| மாஹே | 29405 | 29139 | 99.10% | 266 | 0.91% | 59 | 0.20 % | 19739 | 67.13% |
| ஏனாம் | 40043 | 37807 | 94.42% | 2236 | 5.91% | 386 | 0.96 % | 28559 | 71.32% |

7. பொது மக்களின் நலனுக்காக கீழ்க்கண்ட அம்சங்கள் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றன:

i. 2002 வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் அல்லது உங்கள் உறவினர்களின் பெயர் காணப்படவில்லை என்றாலும், 04.12.2025-க்கு முன் நீங்கள் கையொப்பமிட்ட கணக்கெடுப்பு படிவத்தை வாக்குச்சாவடி நிலை அலுவலருக்கு அளித்தால், வரும் 09.12.2025 அன்று வெளியிடப்படும் வரைவு வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இடம்பெறும். இத்தகைய சந்தர்ப்பங்களில், வாக்காளர்கள் இந்தியத் தேர்தல் ஆணையம் குறிப்பிடும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்க அறிவிப்பு வழங்கப்படும்.

ii. 04.12.2025-க்கு முன் கணக்கெடுப்புப் படிவத்தை சமர்ப்பிக்காவிட்டால், உங்கள் பெயர் வரைவுப் பட்டியலில் இடம்பெறாது.

iii. வாக்குச்சாவடி நிலை அலுவலர் மூன்று முறை வீட்டுக்கு வருகை செய்தும் கணக்கெடுப்புப் படிவங்களை விநியோகிக்க முடியாத

பட்சத்தில் அவ்வாக்காளர்களின் பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாது.

iv. வரைவுப் பட்டியலில் உங்கள் பெயர் இடம்பெறாவிட்டால், உரிமை கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபணைகள் காலத்தில் (claims and objections period) படிவம்-6 அல்லது படிவம்-8 மற்றும் உறுதிமொழிப் படிவம் ஆகியவற்றை சமர்ப்பித்து உங்கள் பெயரை புதிதாகச் சேர்க்கலாம்.

v. வாக்காளர்கள் தாங்கள் சமர்ப்பித்த கணக்கெடுப்பு படிவங்களின் நிலையை https://voters.eci.gov.in தளத்தில் வாக்காளர் அடையாள அட்டை எண்ணை பயன்படுத்தி சரிபார்க்கலாம்.

vi. கணக்கெடுப்பு படிவத்தை எவ்வாறு நிரப்புவது என்பது தொடர்பான தகவல்கள் புதுச்சேரி தலைமைத் தேர்தல் அதிகாரியின் இணையதளத்தில் கிடைக்கின்றன:

- கணக்கெடுப்புப் படிவத்தை நிரப்புவது எப்படி? (தமிழில்)
https://ceopuducherry.py.gov.in/admin/latestupdates/Tamil_EF_filling_guide.pdf

- கணக்கெடுப்புப் படிவத்தைப் நிரப்புவது எப்படி? (ஆங்கிலத்தில்)
https://ceopuducherry.py.gov.in/admin/latestupdates/55966568_3.pdf

- கணக்கெடுப்புப் படிவத்தை இணைய வழியில் நிரப்புவது எப்படி? (தமிழில்)
https://ceopuducherry.py.gov.in/admin/latestupdates/55966596_2.pdf

- கணக்கெடுப்புப் படிவத்தை இணைய வழியில் நிரப்புவது எப்படி? (ஆங்கிலத்தில்)
https://ceopuducherry.py.gov.in/admin/latestupdates/English_EF_filling_guide.pdf

8. வாக்குச்சாவடி நிலை அலுவர்களின் (BLOs) அசாதாரண முயற்சியும் கடின உழைப்புமே சிறப்புத் தீவிர திருத்தத்தின் வெற்றிகரமான முன்னேற்றத்தை உறுதிசெய்கின்றன என்ற தனது பாராட்டைத் தலைமைத் தேர்தல் அதிகாரி பதிவு செய்துள்ளார்.

**ப. ஜவஹர்**
**தலைமை தேர்தல் அதிகாரி**

இணைப்பு: வாக்குச்சாவடி நிலை அலுவர்களின் (BLOs) வெற்றி கதைகள்.

**தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகம், புதுச்சேரி**

**வாக்குச்சாவடி நிலை அலுவலர் - இன்றைய சிறந்த பணியாளர்**

**சட்டமன்றத் தொகுதி:** 29 – மாஹே சட்டமன்றத் தொகுதி

**பாகம் எண் / அமைவிடம்:** 29/03, அரசு L.P. பள்ளி, பரக்கல், மாஹே

**வாக்குச்சாவடி நிலை அலுவலர் பெயர்:** திரு ரதீஷன் V.C.



**கதை:**

மாஹே MGGA கல்லூரியில் மார்க்கராக பணியாற்றி வரும் திரு. ரதீஷன் V.C, 2021 முதல் பா. எண் 29/03, அரசுப் ஆரம்பப் பள்ளி, பரக்கல், மாஹே பகுதியின் வாக்குச்சாவடி நிலை அலுவலராகப் (BLO) பணியமர்த்தப்பட்டுள்ளார். அவர் மிகவும் அர்ப்பணிப்பும் நேர்மையும் கொண்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர் ஆவார். மேலும், 2025ஆம் ஆண்டில் புதுச்சேரி மாநிலத்தின் சிறந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர் விருதையும் பெற்றுள்ளார்.

2026 சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளில், அவர் 100% கணக்கெடுப்பு படிவங்களை (Enumeration Forms) அனைத்து வாக்காளர்களுக்கும் விநியோகித்துள்ளார். இதுவரை 98.18% கணக்கெடுப்பு படிவங்களை அவர் சரிபார்த்து டிஜிட்டல் படுத்தியுள்ளார். 2002 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலுடன் தற்போதைய வாக்காளர்கள் பொருத்தப்பட்ட (Mapping) சதவீதம் 85.77% ஆகும்.

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 879 |
| அச்சிடப்பட்ட மொத்த கணக்கெடுப்புப் படிவங்கள் | 879 |
| விநியோகிக்கப்பட்ட மொத்த கணக்கெடுப்புப் படிவங்கள் | 879 |
| டிஜிட்டல்-படுத்தப்பட்ட மொத்த கணக்கெடுப்புப் படிவங்கள் | 863 |
| வாக்குச்சாவடி அலுவலரால் சரிபார்க்கப்பட்ட கணக்கெடுப்புப் படிவங்கள் | 863 |
| தாமாக / சந்ததியாக பொருத்தப்பட்டவை (Mapped) | 754 |

**தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகம், புதுச்சேரி**

**வாக்குச்சாவடி நிலை அலுவலர் - இன்றைய சிறந்த பணியாளர்**

**சட்டமன்றத் தொகுதி:** 28 – நிரவி – டி. ஆர். பட்டினம் சட்டமன்றத் தொகுதி

**பாகம் எண் / அமைவிடம்:** 28/11, அரசு தொடக்கப் பள்ளி, கோவில் பத்து, நிரவி, காரைக்கால்

**வாக்குச்சாவடி நிலை அலுவலர் பெயர்:** திருமதி லலிதா





**கதை:**

பா. எண் 28/11, அரசு தொடக்கப் பள்ளி, கோவில் பத்து, நிரவி பகுதிக்கான வாக்குச்சாவடி நிலை அலுவலராகப் (BLO) பணியாற்றி வரும் திருமதி லலிதா, தனது நேர்மை, மற்றும் திறமையான களப்பணி ஆகியவற்றால் அறியப்பட்டவர்.

சிறப்பு தீவிர திருத்தப் (SIR) பணிகளில், மொத்தமுள்ள 1,232 வாக்காளர்களுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் (Enumeration Forms) வழங்கி 100 சதவீத விநியோகத்தை உறுதிப்படுத்தியுள்ளார். இதன் மூலம் மக்களைச் சென்றடைவதில் அவர் வலிமையாகவும் வாக்காளர் தொடர்பில் சிறந்தும் இருப்பது தெரிகிறது.

அவர் 1,020 கணக்கெடுப்புப் படிவங்களை ஏற்கனவே டிஜிட்டல்-படுத்தியுள்ளார். இது, தகுந்த நேரத்தில் சரிபார்ப்பு மற்றும் துல்லியமான புதுப்பிப்பு செயல்பாடுகளில் அவர் காட்டும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 1232 |
| அச்சிடப்பட்ட மொத்த கணக்கெடுப்புப் படிவங்கள் | 1232 |
| விநியோகிக்கப்பட்ட மொத்த கணக்கெடுப்புப் படிவங்கள் | 1232 |
| டிஜிட்டல்-படுத்தப்பட்ட மொத்த கணக்கெடுப்புப் படிவங்கள் | 1020 |
| வாக்குச்சாவடி அலுவலரால் சரிபார்க்கப்பட்ட கணக்கெடுப்புப் படிவங்கள் | 1020 |
| தாமாக / சந்ததியாக பொருத்தப்பட்டவை (Mapped) | 820 |